செ.வெ.எண்: 27/ஆகஸ்ட் நாள்: 11.08.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## சுதந்திர தினத்தை முன்னிட்டு மாவட்டத்திலுள்ள 429 ஊராட்சிகளிலும் கிராமசபை கூட்டம் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

சுதந்திர தினத்தை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள 429 ஊராட்சிகளிலும் கிராமசபை கூட்டம் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

இந்திய பெருநாட்டின் சுதந்திர தினமான 15.08.2017 அன்று மாவட்ட தலைநகரிலும், தாலுகா, ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சிகள் அளவில் சுதந்திர தின கொடியேற்ற நிகழ்ச்சிகள் வெகுசிறப்பாக நடைபெற உள்ளன. அன்றைய தினம் “வெள்ளையனே வெளியேறு இயக்கம்” 75வது ஆண்டு நிறைவினை சிறப்பாக கொண்டாடவும், புதிய இந்தியாவை உருவாக்க உறுதி மொழி ஏற்கவும் அரசு உத்தரவிட்டுள்ளது.

அதனடிப்படையில், ஊரக உள்ளாட்சி அமைப்பில் அனைத்து ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்பட உள்ளது. இதன்படி, இராமநாதபுரம் மாவட்டத்தில் 429 ஊராட்சிகளிலும் கிராம சபை கூட்டங்கள் நடத்தி அது சமயம் பள்ளி மாணவர்கள், மகளிர் சுய உதவிக் குழு அமைப்புகள், சுதந்திர போராட்ட தியாகிகள், அரசின் நல திட்ட பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்புடன் கிராமங்களில் ஊர்வலம் வந்து “வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்” 75வது ஆண்டு நிறைவினை சிறப்பாக கொண்டாடி கிராம சபை கூட்டத்தில் கலந்து கொண்டு உறுதிமொழி ஏற்கபபடவுள்ளது.

மேலும், இந்த கிராம சபை கூட்டத்தில் கிராம ஊராட்சி வளர்ச்சி திட்ட அறிக்கை, கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் அதன் செலவினம், அந்தியோதயா இயக்கம், டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள், திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற ஊராட்சிகளை பிரகடனம் செய்தல், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் செயலாக்கம், திடக்கழிவு மேலாண்மை திட்டம், நியாயவிலை கடைகள் செயல்பாடு குறித்த சமூக தணிக்கை, கிராம ஊராட்சிகளில் வரும் காலங்களில் பேரிடர் அபாய குறைப்பு பணிகள் முன்னுரிமை, குடிநீரை சிக்கனமாக பயன்படுத்துதல் மற்றும் 01.01.2018 முதல் அனைத்து ஊராட்சிகளிலும் பிளாஸ்டிக் பயன்பாட்டை தடை செய்தல் குறித்து திட்டமிடுதல் போன்ற 29 பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

கிராம சபை கூட்டத்தை திறம்பட நடத்திட ஏதுவாக ஒவ்வொரு ஊராட்சிக்கும் , ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலிருந்து பற்றாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். எனவே, கிராம பொதுமக்கள் மேற்படி கிராம சபை கூட்டத்தில் திரளாக கலந்து கொண்டு மேற்காணும் பொருள்கள் மற்றும் அந்தந்த ஊராட்சிகளின் வளர்ச்சிக்காக தெரிவிக்க விரும்பும் நல்ல ஆலோசனைகள் குறித்து விவாதித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

எந்த ஊராட்சியிலாவது கிராம சபைக் கூட்டம் நடத்தப்படவில்லை என்பதாக தெரியவரின் அது குறித்து உடனடியாக உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) ன் தொலைபேசி எண்ணிற்கு (9482081250) தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**